DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -5

| | | |
|---|---|---|
| Name | : திரு. பிரகாஷ் | Caste: |
| Father's Name: | திரு. பாரிவள்ளல் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 3rd day of January -2024.

**A1 , A2, A5 to A9, A11, A13 to A18 present. A3 produced.**

**Date: 03.01.2024**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம், வங்குடி கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் தற்போது தனியார்நிதிநிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன நபர்களை தெரியும். இறந்துபோன பிரபு எனது உடன்பிறந்து மூத்த சகோதரர். காசிநாதன் எனக்கு பெரியப்பா முறைவேண்டும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். அவர்கள் எனது துாரத்து உறவினர்கள்.

கடந்த 16.05.2008 அன்று காலை 10.00 மணிக்கு மேலாக நான், மதியழகன், ஜோதிவேல் ஆகிய மூவரும் மதியழகன் வீட்டுவாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். மதியழகன் வீடானது அ.சா.1 ராஜலிங்கத்தின் வீட்டிற்கு எதிர்புறம் காளியம்மன்கோவில் தெருவில் உள்ளது. அதனை மேலத்தெரு என்று முன்னர் அழைத்துவந்தார்கள். அப்போது அலறல் சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு நான் பார்த்தபோது ராஜலிங்கம், அமிர்தலிங்கம், தர்மலிங்கம் மனைவி ஜெயந்தி, மகாலிங்கம்

ஆகியோர்கள் ஓடிவந்தார்கள். அவர்களை துரத்திகொண்டு எதிரிகள் ராஜதுரை, தினேஷ், திருவாளப்புத்தூர் ரமேஷ், ரமேஷ் த.பெ.சக்திவேல், சிலம்பரசன், பாஸ்கரன், சசிகலா, கனகவள்ளி ஆகியோர் வந்தார்கள். எதிரி தினேஷ் கையில் வீச்சருவாள் வைத்திருந்தார். எதிரிகள் ராஜதுரை, திருவாளப்புத்தூர் ரமேஷ், ரமேஷ் த.பெ.சக்திவேல், சிலம்பரசன், பாஸ்கரன் ஆகியோர் கைகளில் பட்டாகத்தி வைத்திருந்தார்கள்.

எதிரி ராஜதுரை மகாலிங்கத்தை கழுத்தில் பட்டாகத்தியால் ஒரே வெட்டாக வெட்டிவிட்டார். எதிரி தினேஷ் வீச்சருவாளால் மகாலிங்கத்தை வலது தோள்பட்டை, கன்னம் ஆகிய இடங்களில் வெட்டிவிட்டார். அந்த சத்தம் கேட்டு தர்மலிங்கம் ஓடிவந்தார். தர்மலிங்கம் தம்பிகளை ஒன்றும்செய்துவிடாதீர்கள் விட்டுவிடுங்கள் என்று சொன்னார். அப்படி சொல்லிகொண்டு அவர் வரும்போது எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் என்பவர் பட்டாகத்தியால் தர்மலிங்கத்தின் வயிறு, மார்பு, இடது புஜம், வலது தோள்பட்டை, பின்கழுத்து, வலது கீழ்பக்க தாடை ஆகிய இடங்களில் வெட்டினார்.

அப்போது எதிரி பாஸ்கரன் தர்மலிங்கத்தின் இடது காலில் பட்டாகத்தியால் வெட்டினார். எதிரி காளிதாசன், ஸ்ரீதர், ஜவகர்பாபு, விஜய், சுரேஷ் ஆகியோர் தர்மலிங்கத்தை சுற்றிவளைத்துவிட்டார்கள். எதிரி பாஸ்கரன் வெட்டியதில் தர்மலிங்கம் தடுமாறிய நேரத்தில் எதிரி காளிதாசன் தர்மலிங்கத்தின் மார்பில் உதைத்தார். அதில் கீழே விழுந்த தர்மலிங்கத்தின் மார்பில் எதிரி காளிதாசன் ஏறி உட்கார்ந்துகொண்டார்.

அந்த சமயத்தில் ஜானகி, காசிநாதன் ஆகியோர் ஓடிவந்தார்கள். அந்த சமயத்தில் தர்மலிங்கத்தின் தலையை எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் என்பவர் தர்மலிங்கத்தின் தலையை வெட்டி எடுத்துவிட்டார். எதிரி திருவாளபுத்தூர் ரமேஷ் காசிநாதனின் முகத்திலும், இடது விலாவிலும், இடது கன்னத்திலும் பட்டாகத்தியால் வெட்டினார். எதிரி சிலம்பரசன் பட்டாகத்தியால் காசிநாதனின் இடதுகை, இடது கழுத்து, பின்பக்க கழுத்து ஆகிய இடங்களில் வெட்டினார். அதனால் காசிநாதன் ரத்தவெள்ளத்தில் விழுந்துவிட்டார்.

ஜானகி ஏன்டா இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரி திருவாளபுத்தூர் ரமேஷ் ஜானகியின் தலையில் பட்டாகத்தியால் வெட்டினார். அதனால் ஜானகி விழுந்துவிட்டார். எதிரி தினேஷ் கீழே விழுந்த ஜானகியின் பிறப்பு உறுப்பில் மிதித்துகொண்டு அவரது மார்பிலும், வயிற்றிலும் வெட்டி முடியை அறுத்துவிட்டார்.

அந்த நேரத்தில் எதிரி காளிதாசன் ஜானகியின் கழுத்தில் வெட்டினார். எதிரிகள் காளிதாசன், ஜவகர்பாபு, ஸ்ரீதர், சுரேஷ், விஜய் ஆகியோர் காசிநாதன், ஜானகி, தர்மலிங்கம் ஆகியோரை சுற்றி வளைத்துகொண்டார்கள். எதிரிகள் சசிகலா, கனகவள்ளி ஆகிய இருவரும் காசிநாதன் குடும்பத்தில் ஒருவரையும் விட்டுவிடாதீர்கள் எல்லோரையும் வெட்டிகொல்லுங்கடா என்று சொன்னார்கள். எதிரி சசிகலா மேற்படி நபர்கள் வெட்டபட்டதற்கு பிறகு போட்ட சபதத்தை முடித்துவிட்டோம் என்று சொன்னார்.

அந்த நாள் வரை எதிரி சசிகலா தனது விரித்துபோட்டிருந்த தலைமுடியை முடிந்துகொண்டார். எதிரி சசிகலாவின் கணவர் தேசிங்குபாலன் இறந்ததிற்கு ராஜலிங்கம் மற்றும் அவரது குடும்பத்தை சேர்ந்தவர்கள் தான் காரணம் என்று சசிகலா நினைத்துகொண்டு அவரது குடும்பத்தை பழிவாங்குவதற்காக சபதம் போட்டார். சம்பவ சமயத்தில் எதிரிகள் திருஞானம், பழனிசாமி, ரவிசந்திரன், பிரபாகரன் ஆகியோர் வந்தார்கள். எதிரி ரவிசந்திரன் கையில் வீச்சருவாளும் மற்ற மூவரும் கையில் பட்டாகத்தியும் வைத்திருந்தார்கள். எதிரி பழனிசாமி எனது அண்ணன் பிரபுவின் தலையை காலால் உதைத்துகொண்டே வந்தார்.

அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களில் ரத்தம் இருந்தது. எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை காளியம்மன் கோவிலின் பின்புறம் போட்டார். தர்மலிங்கத்தின் தலையை எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் என்பவர் காளியம்மன் கோவிலின் முன்புறமுள்ள சூலத்தில் குத்திவைத்தார். எதிரி பழனிசாமி காளியம்மன் கோவிலின் முன்புறம்நின்றுகொண்டிருந்து கையில் வைத்திருந்த பட்டா கத்தியால் தரையில் தட்டி எங்களுக்கு எதிராக யாராவது சாட்சி சொன்னால் அவர்களுக்கும் இதே கதிதான் என்று சொன்னார்.

இவை அனைத்திற்கும் காரணம் எதிரி பாரதிதாசன் தான். அவர்தான் திட்டம்போட்டு கொடுத்தார். ராஜலிங்கத்தின் குடும்பத்தை காலிசெய்யவேண்டுமென்று அவர்தான் திட்டம்போட்டு கொடுத்தார்.

அந்த சம்பவத்திற்கு பின்னர் ராஜலிங்கமும், அமிர்தலிங்கமும் என்னிடம் பிரபுவை பக்கத்திலுள்ள இடத்தில் வைத்து எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் பட்டாகத்தியால் வெட்டியதாகவும், சுரேசை எதிரி ரவிசந்திரன் வீச்சருவாளாலும், எதிரி திருஞானம் பட்டாகத்தியாலும் வெட்டியதாகவும் சொன்னார்கள். ராஜலிங்கம் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொல்லிவிட்டு சென்றார்.

நான் சென்று பார்த்தபோது பிரபுவின் உடல் தலையில்லாமலும், சுரேஷ் இறந்தநிலையிலும் தரையில் கிடந்தார்கள். அவர்களை சுற்றி ரத்தம் இருந்தது. போலிசார் ஊருக்கு வந்து என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

**<u>8 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

16.05.2008 அன்று நான் படித்துகொண்டு இருந்தேனா என்றால் நான் கல்லூரியில் படித்துகொண்டிருந்தேன். அது மே மாதம் என்பதால் விடுமுறைதினம் தான் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். பிரபு இறந்தது சம்மந்தமாக நான் தனியாக புகார் கொடுக்கவில்லை என்றால் ராஜலிங்கம் ஏற்கனவே புகார்கொடுத்துவிட்டார். நான் காவல்நிலையத்திற்கு போவதற்கு முன்பாகவே போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். நான் தனியாக புகார்கொடுக்கதேவையில்லை என்று போலிசார் சொல்லிவிட்டார்கள்.

16.05.2008 அன்று ராஜலிங்கம் ஊரிலேயே இல்லை என்றாலும், அவர் கொடுத்தத புகார்விவரம் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் நான் ராஜலிங்கத்தை பார்த்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பாக நான் மதியழகன் என்பவரது வீட்டிற்கு முன்பாக நின்று பேசிகொண்டிருந்ததாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

தர்மலிங்கத்தின் காலில் 8 ஆம் எதிரி பாஸ்கரன் வெட்டியதாக நான் சொல்வது

தவறு என்றால் சரியல்ல. தர்மலிங்கத்திற்கு காலில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 8 ஆம் எதிரி தர்மலிங்கத்தின் காலில் வெட்டியதாகவும், எதிரி காளிதாசன் அவரது மார்பில் உதைத்ததாகவும் அதில் தடுமாறி தர்மலிங்கம் கீழே விழுந்ததாகவும், எதிரி காளிதாசன் அவரது மார்பில்ஏறி உட்கார்ந்ததாகவும் நான் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

நான் சொல்லக்கூடிய இடத்தில் தர்மலிங்கம் இல்லை என்றாலும், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் 8 ஆம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. அ.சா.1 கேட்டுகொண்டதன்பேரில் நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வங்குடிகிராமத்தில் மேலத்தெருவில் வசிக்கிறேன். மதியழகன் அதே தெருவில்தான் வசிக்கிறார். அந்த தெருவை காளியம்மன் கோவில் தெரு என்றும் சொல்லுவார்கள். மதியழகன் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையே 100 அடி துாரம் இருக்கும். நான், மதியழகன், ஜோதிவேல் ஆகிய மூவர்மட்டும் தான் மதியழகன் வீட்டு முன்புறம் உள்ள தாழ்வாரத்தில் பேசிக்கொண்டிருந்தோம்.

இறந்துபோன பிரபு எனது உடன்பிறந்த சகோதரர். இறந்துபோன மற்ற நால்வரும் எனது உறவினர்கள் தான். போலிசார் என்னை சம்பவ இடத்தில்வைத்து சம்பவதினத்தன்று விசாரித்தார்கள். அதன்பின்னிட்டும் விசாரித்தார்கள். சம்பவத்தை நான் மதியழகன் வீட்டின் வாசலில் நின்று பார்த்தேன். அதற்கு எதிர்புறம் பூராசாமி கடை இருக்கிறது.

நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். சம்பவமானது சுமார் 20 நிமிடங்களிலிருந்து 30 நிமிடங்கள் நடந்தது. சம்பவம் நடந்து சுமார் 2 மணிநேரத்தில் போலிசார் சம்பவஇடத்திற்கு வந்துவிட்டார்கள். நான் பார்த்தபோது மகாலிங்கத்தை தான் முதலில் வெட்டினார்கள். மகாலிங்கம் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி ஓடிவந்தார்.

மகாலிங்கத்தை காமராஜர் வீட்டின் எதிர்புறமும், பூராசாமிகடைக்கு எதிர்புறமும்

உள்ள பகுதியில் ரோட்டில் வெட்டினார்கள். அதனை நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

அப்போது தர்மலிங்கம் அவரது வீட்டிலிருந்து மேற்கிலிருந்து கிழக்குநோக்கி வந்தார். அவரையும் பூராசாமி கடைக்கு எதிர்புறமுள்ள பகுதியில் வைத்து தான் வெட்டினார்கள். ஜானகி, காசிநாதன் ஆகியோர் அவர்களது வீட்டிலிருந்து மேற்குலிருந்து கிழக்குநோக்கி ஓடிவந்தார்கள். தர்மலிங்கத்தை வெட்டிய இடத்திலிருந்து 10 அடி முன்புறம் உள்ள இடத்தில் வைத்து காசிநாதனை வெட்டினார்கள்.

சம்பவத்தை பார்த்த நான் பூராசாமிகடைக்கும், வேலாயுதம் வீட்டிற்கும் நடுவிலுள்ள சந்து பகுதியில் சென்று ஒளிந்துகொண்டேன். என்னுடன் சாட்சி ஜெகதீஷ்வரன் நின்றார். சற்றுதள்ளியுள்ள இடத்தில் ஊர்காரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். மேற்படி சந்திற்கும் காசிநாதன், ஜானகி ஆகியோர் வெட்டப்பட்ட இடத்திற்கும் இடையே சுமார் 20 அடி தொலைவு இருக்கும்.

எதிரி தினேஷ் ஜானகியின் பிறப்பு உறுப்பில் மிதித்தார் என்றும், அவர் ஜானகியின் வயிறு, மார்பு ஆகிய பகுதிகளில் வெட்டினார் என்றும், அவர் ஜானகியின் தலைமுடியை அறுத்தார் என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

எதிரிகள் சசிகலா, கனகவள்ளி ஆகியோர் சபதத்தை முடித்துவிட்டோம் என்று சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். எதிரி சசிகலா தனது தலைமுடியை அள்ளி முடிந்ததாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். தேசிங்குபாலன் கொலைவழக்கில் அமிர்தலிங்கம், ராஜலிங்கம் ஆகியோருக்கு தண்டனை விதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

தேசிங்குபாலன்கொலைவழக்கில் இவ்வழக்கின் 9 ஆம் எதிரியான சசிகலா தான் புகார்வாதி என்றால் சரிதான். அந்த கொலைவழக்கில் இவ்வழக்கின் எதிரிகளான ரவிசந்திரன், திருஞானம் ஆகியோர் சாட்சிகளா என்றால் திருஞானம் சாட்சியாக இருந்தது தெரியும். ரவிசந்திரன் சாட்சியா என்று நினைவில்லை. எனது அண்ணன்

பிரபு, சுரேஷ் ஆகியோர் வெட்டப்பட்டதை நான் நேரில் பார்க்கவில்லை. நான் நின்ற இடத்திலிருந்து பார்த்தால் பிரபு, சுரேஷ் ஆகியோர் வெட்டப்பட்ட இடங்கள் தெரியாது என்றால் சரிதான்.

காசிநாதன், ஜானகி, தர்மலிங்கம் ஆகியோர் வெட்டப்பட்ட இடத்திற்கும், பிரபு வெட்டப்பட்ட இடத்திற்கும் இடையே 200 மீட்டர் தொலைவு இருக்கும். சம்பவத்திற்கு 13 ஆம் எதிரிதான் திட்டம்போட்டு கொடுத்தார் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் ஊரில் உள்ளவர்கள் சொன்னார்கள். ஜானகியும் என்னிடம் சொன்னார். ஜானகி மட்டும் தான் என்னிடம் நேரடியாக சொன்னார். மற்ற யாரும் என்னிடம் நேரடியாக சொல்லவில்லை.

ஜானகியின் குடும்பத்தை அழிப்பதற்கு 13 ஆம் எதிரி திட்டம்போடுவதாகத்தான் ஜானகி என்னிடம் சொன்னார். அந்த திட்டம் தொடர்பாக காவல்நிலையத்தில் நானோ, ஜானகியின் குடும்பத்தினரோ புகார்கொடுக்கவில்லை. சம்பவத்திற்கு சுமார் 15 வருடங்களுக்கு முன்பே 13 ஆம் எதிரி காட்டுமன்னார்கோவிலுக்கு குடியேறிவிட்டார் என்றால் சரிதான். ஆனால் அவர் அடிக்கடி எங்களது ஊருக்கு வருவார் என்றும் எங்கள் ஊருக்கும், காட்டுமன்னார்கோவிலுக்கும் இடையே 11 கி.மீ தொலைவு தான் என்றும் சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

13 ஆம் எதிரி எங்கள் ஊருக்கு 15 நாட்களுக்கு ஒருமுறையும் மற்றும் விசேஷங்களுக்கும் வருவார். அவர் சிதம்பரத்தில் அரசுபோக்குவரத்து கழகத்தில் நடத்துநராக சம்பவத்திற்கு முன்பிருந்தே வேலை செய்துவருகிறார் என்றால் சரிதான். சம்பவத்திற்கும் 13 ஆம் எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றாலும், அவர் 2 ஆம் எதிரியின் சகோதரர் என்பதால் அவரை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல. சம்பவத்தினத்தன்று நான் ஊரிலேயே இல்லை என்றாலும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**6–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

திருவாளபுத்தூர் ரமேஷ் என்பவர் ஜானகியை வெட்டியதாக நான் போலிசார்

விசாரணையில் சொல்லியிருக்கிறேன். போலிசார் விசாரணையில் நான் அதுபோன்று சொல்லவில்லை என்றாலும், தற்போது போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. ( மற்ற சங்கதிகளை பொறுத்து 13 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்ளுகிறார்).

**3 ஆம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அவர் மேற்கண்ட குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.**

**எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜரில்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.